

# 04 வெகுசன ஊடக நிறுவனம்சார் கற்கை




### நோக்கம்

வெகுசன ஊடகங்களை பயன்படுத்துவதன் மூலமே பொதுமக்கள் அவ்வூடகங்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். ஊடக செயற்பாட்டின் உள்ளடக்கம் மற்றும் அதன் பண்புகளை தீர்மானிக்கும் நிறுவன அமைப்புக்களுடனோ அல்லது அதன் உரிமையாளர்களுடனோ பொதுமக்களுக்கு எவ்வித தொடர்புகளும் காணப்படுவதில்லை.

ஆனால் ஊடக உரிமையாளர்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையிலேயே அவ்வாறான தொடர்புகள் காணப்படுகின்றன. வெகுசன ஊடக நிறுவனமொன்றின் உரிமையும் அமைப்பும் ஊடகவியலாளர்களுக்கு அழுத்தத்தை ஏற்படுத்துமாயின், அதன் விளைவானது இறுதியில் பெறுநர்களான பொதுமக்களையே தாக்கத்திற்குட்படுத்தும். அரசாங்கமானது வெகுசன ஊடகங்களின் உரிமையாளராவதோடு, நாட்டின் கொள்கை வகுப்பாளராகவும் உள்ளது. எனவே அரசிற்கும் வெகுசன ஊடகங்களுக்குமிடையே தொடர்புகள் காணப்படுகின்றன.

வெகுசன ஊடக நிறுவனங்களை அவதானிப்பதன் மூலம் அந் நிறுவனங்களின் ஊடக நடவடிக்கைகளை மிகச்சிறப்பாக பகுப்பாய்விற்குட்படுத்த முடியும். அதற்கமைய இலங்கையில் வெகுசன ஊடக நிறுவன கட்டமைப்புத் தன்மையை ஆராய்ந்து, ஊடகப் பண்பாட்டின் மூலம் வெளிப்படுத்தப்படவேண்டியதை யதார்த்தமாக ஒப்புவிக்கக் கூடிய திறனை பெற்றுக்கொள்ள முடியும்.

# ஊடக நிறுவனங்கள் தொடர்பான கல்வி

## 4.1 இலங்கையில் வெகுசன ஊடக நிறுவனங்களின் உரித்துடமையும் செயற்பாடுகளும்

பொதுமக்கள் செய்தித்தாள்களை வாசிப்பர், வானொலியை செவிமடுப்பர், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டுகளிப்பர். அந்தந்தச் செய்திகளின் அல்லது வானொலிச் சேவைகளின் அல்லது தொலைக்காட்சி சேவைகளின், ஊடகக் கொள்கை மற்றும் தத்துவம் பற்றி சாதாரண மக்களாலும் கூட உணர்ந்துகொள்ள முடியும். விசேடமாக செய்திப் பத்திரிகைகளின், வானொலி அலைவரிசைகளின், தொலைக்காட்சி அலைவரிசைகளின் செய்தி நிகழ்ச்சிகளைப் பற்றி விளக்கம் கூறிட அவர்கள் தூண்டப்படுவர். அது பற்றி அவர்களிடமுள்ள நம்பிக்கையானது சமனற்றுக் காணப்படும்.

வெகுசன ஊடகத்தின் உரித்துடமை அதன் செயற்பாடுகளில் செலுத்தும் செல்வாக்கே இதற்குக் காரணமாகுமென அவர்கள் வெளிப்படுத்துகின்றனர். அவர்கள் தாம் வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்துவது எவ்வாறென்பதைத் தீர்மானிப்பது இந்த பகுப்பாய்வு சார்ந்த அறிவை அடிப்படையாகக் கொண்டே ஆகும். வெகுசன ஊடகச் செய்திகளை விளங்கிக் கொள்வதற்கு அவ்வவ் வெகுசன ஊடக உரித்துடமை பற்றிக் கொண்டுள்ள விளக்கம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பது இதிலிருந்து தெரியவருகிறது.

### (1) அரசாங்க, தனியார் ஊடக உரித்துடமை

இலங்கையின் முதலாவது, செய்திப் பத்திரிகையான 'கொழும்பு ஜேர்னல்' எனும் பெயருடைய ஆங்கில செய்திப்பத்திரிகை 1832 இல் வெளியிடப்பட்டதோடு, இலங்கையின் வானொலி ஆரம்பமானது 1924 இல் ஆகும். 1979 இல் இலங்கையின் முதலாவது தொலைக்காட்சி சேவையாக ''சுயாதீன தொலைக்காட்சி சேவை'' ஆரம்பமானது.

## செய்திப் பத்திரிகைகள்

### ❒ ஆசிரியர் உரிமைத்துவ செய்திப் பத்திரிகைகள்

தனிப்பட்டமுறையில் தம்மாலேயே ஆசிரியர்களாலேயே பதிப்புச் செய்யப்பட்டு தமது உரிமையின் கீழ் வெளியிடப்பட்ட செய்திப்பத்திரிகைகள் இப்பிரிவில் அடங்கும். ஜி.டி பேலிஸ் அப்பு ஹாமி அவர்களால் பதிப்பிக்கப்பட்டு 1871 இல் வெளியிடப்பட்ட ''கவட்ட கத்திகயா'' வும் 1841 இல் யாழ்ப்பாணத்தில் ஹென்றி மார்ட்டின் மற்றும் ஸெயிபெயிஸன் என்போரால் பதிப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்ட உதயதாரகை செய்திப் பத்திரிகையும் 1874 இல் வெளியீட்டாளரான ஜி.எச் லெண்ட் மற்றும் ஈ.டார்ளி என்னும் இருவரால் பதிப்புச் செய்யப்பட்ட ''ஒப்செவர் அண்ட் கொமர்ஷல் அட்வடைசர்'' என்னும் செய்திப்பத்திரிகையும் ஆசிரியரின் தனிப்பட்ட உரிமைத்துவத்துக்கு உரியனவாகும். 1909 இல் 'தினமின' செய்திப்பத்திரிகை எச். எஸ் பெரேரா என்னும் பெயருடைய ஆசிரியரின் தனிப்பட்ட உரிமைத்துவத்தின் கீழ் உருவானது.


Colombo Journal.
Saturday, January 28, 1832.

உரு 4.1

### ❒ பொதுசன அமைப்புகளுக்குச் சொந்தமான செய்திப் பத்திரிகைகள்

இலங்கையின் செய்திப்பத்திரிகை வரலாற்றில் பொதுசன அமைப்புகளின் வழியாக செய்திப்பத்திரிகைகள் வெளியிடப்பட்டபோது, கவனம் செலுத்தப்பட்ட விடயம் என்னவெனில், அக்காலத்தில் நிலவிய பிரித்தானியர் ஆதிபத்தியத்துக்குட்பட்ட ஆட்சிமுறையின் ஒரு சமூகப் பெறுபேறாக அது காணப்பட்டமையாகும். இலங்கையின் முதலாவது சிங்களச் செய்திப் பத்திரிகையான 'லங்காலோகய' 1862 இல் சங்கைக்குரிய புலத்கம தம்மாலங்கார தேரரினால் ஆரம்பிக்கப்பட்டு லங்காலோகய அச்சகத்தினால் அச்சிடப்பட்டது. இப் பத்திரிகை முதலாவது சிங்களப் பத்திரிகையான போதிலும் அது பதிவு செய்யப்படாத ஒன்றாகும். பதிவு செய்யப்பட்ட முதலாவது சிங்களப்பத்திரிகையாகக் கருதப்படுவது 'லக்மினி பஹன்' செய்திப்பத்திரிகை ஆகும். இது 1862 இல் கொக்கல தர்மரட்ண பண்டிட் என்பவரால் பதிவு செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. அதற்கு அக்கால பிரபுக்கள் சிலரும், பௌத்த பிக்குகளும் உதவி செய்தனர். பொதுசன அமைப்புகளினால் செய்திப் பத்திரிகைகள், வெளியிடும் பணி ஆரம்பமானது சமயம், கலைகள், தேசப்பற்று ஆகியவற்றின் பின்னணியிலாகும். கத்தோலிக்க சமயப்பிரச்சாரத்துக்காக கத்தோலிக்க அமைப்புகளாலும் பௌத்த சமயப் பிரசாரத்துக்காக பௌத்த சமய அமைப்புகளினாலும் செய்திப்பத்திரிகைகள் வெளியிடப்படலாயின. கத்தோலிக்க சபையினால் 1866 இல் வெளியிடப்பட்ட 'ஞானார்த்த பிரதீப' 1867 இல் வெளியிடப்பட்ட 'சத்தியமார்க்கம்' உம் அத்தகைய

கத்தோலிக்க சமய செய்திப்பத்திரிகைகள் இரண்டு ஆகும். அவ்வாறே 1906 இல் வெளியிடப்பட்ட 'சிங்கள பௌத்தயா', மகாபோதி இயக்கத்துக்குரிய ஒன்றாகும். 'சிங்கள பலய' என்னும் செய்திப்பத்திரிகை சிங்கள மகா சபையினால் வெளி யிடப்பட்டது.

## ❒ தனிப்பட்ட வர்த்தகர்களுக்குச் சொந்தமான செய்திப்பத்திரிகை

ஆரம்பத்தில் ஆசிரியர்களால் சொந்தமாக நடத்தப்பட்டு வெளியிடப்பட்ட செய்திப்பத்திரிகைகள் அவர்களால் தொடர்ந்து நடத்த முடியாமல்போன சந்தர்ப் பங்களில், தனியார் வர்த்தகர்களால் அவை கொள்வனவு செய்யப்பட்டன. அவைதவிர, புதிய பத்திரிகைகளை ஆரம்பிக்கவும் தனியார் வர்த்தகர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

இலங்கையில் செய்திப் பத்திரிகை வரலாற்றில் ஆரம்பிக்கப்பட்ட முதலா வது தனியார் செய்திப்பத்திரிகை ஸ்தாபனமாக விளங்குவது 1919 இல் டீ.ஆர் விஜேவர்தன என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட லேக் ஹவுஸ் பத்திரிகை ஸ்தாபனம் என்கிற வரையறுக்கப்பட்ட ஐக்கிய செய்திப் பத்திரிகை நிறுவனம் ஆகும். 1947 இல் 'லங்காதீப' செய்திப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. 1961 இல் வரையறுக்கப்பட்ட எம்.டி குணசேன ஸ்தாபனத்தால் 'தவச' செய்திப்பத்திரிகை ஸ்தாபனம் என்கிற சுயாதீனச் செய்திப் பத்திரிகை நிறுவனம் உருவாக்கப்பட்டது. உபாலி செய்திப்பத்திரிகை ஸ்தாபனமானது 1981 இல் நிறுவப்பட்டது. அதன் உரிமையாளர் பிரபல வர்த்தகரான உபாலி விஜேவர்தன ஆவார். 1986 இல் வரையறுக்கப்பட்ட விஜய செய்திப் பத்திரிகை ஸ்தாபனம் நிறுவப்பட்டது. அதன் உரிமையாளர், லேக் ஹவுஸ் நிறுவன உரிமையாளரான டீ. ஆர் விஜேவர்தனவின் புதல்வர் ரஞ்சன் விஜேவர்தன ஆவார். இவை தவிர தமிழ்ச் செய்திப் பத்திரிகையான ''வீரகேசரி'' இனை வெளியிடும் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனமும் இங்கு குறிப்பிடத்தக்க வரலாற்றைக் கொண்டதாகும்.

அத்துடன் ஏசியன் மீடியா பப்ளிகேஷன் இலிருந்து வெளியிடப்படும் ''தினக்குரல்' பத்திரிகையும், லேக் ஹவுஸ் நிறுவனத்தின் ''தினகரன்'' செய்திப் பத்திரிகையும் தேசிய அளவில் பிரபலமான தமிழ்ச் செய்திப் பத்திரிகைகளாகக் காணப்படுகின்றன.

## ❒ அரசியல் கட்சிகளுக்குரித்தான செய்திப் பத்திரிகைகள்

தமது அரசியல் கொள்கை, அபிப்பிராயங்களை மக்கள் மயப்படுத்துவதற்காக செய்திப்பத்திரிகைகளை ஆரம்பித்தமை, இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு அண் மித்தான காலகட்டத்தில் ஏற்பட்ட புதியதொரு பிரவேசமாகும். சகல அரசியல் கட்சி களும் தமக்கேயுரிய செய்திப்பத்திரிகையொன்றை வெளியிடுவதில் அக்கறை காட்டின. பிரதான அரசியல் கட்சிகளும் சிறிய அரசியல் கட்சிகளும் இவ்விதமாக அரசியல் சார்ந்த செய்திப்பத்திரிகைகளை வெளியிட்டன.

❒ அரசுக்குச் சொந்தமான செய்திப் பத்திரிகைகள்

இலங்கையில் வெளியிடப்பட்ட முதலாவது செய்திப்பத்திரிகையான 'கொழும்பு ஜேர்னல்' அரசின் ஆதரவின் கீழ் வெளியிடப்பட்டதாகும். அதன் பதிப் பாசிரியர் ஜோர்ஜ் ஆவார். ஜோர்ஜ் லீ அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குப் புறம்பாக செய்திப்பத்திரிகையை வெளியிட்டதனால் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியினால் மிகவும் குறுகிய காலத்தில் கொழும்பு ஜேர்னல் செய்திப்பத்திரிகை மூடப்பட்டது. 1973 இல் லேக்ஹவுஸ் செய்திப்பத்திரிகை நிறுவனம் என்கிற வரையறுத்த ஐக்கிய செய்தி நிறுவனத்தின் சில பங்குகள் அரசினால் சுவீகரிக்கப்பட்டன.

மேற்குறித்த பகுப்பாய்வின் படி செய்திப் பத்திரிகைகளின் உரித்துடைமை யானது இரு பிரிவுகளுக்குள் அடங்கும். அவையாவன,

1. அரசுக்குரித்தான செய்திப்பத்திரிகைகள்
2. தனியார் துறைக்கு சொந்தமான பத்திரிகைகள்

இங்கு ஆசிரியருக்கு சொந்தமான செய்திப்பத்திரிகைகள், பொதுசன அமைப் புகளுக்கு உரித்தான செய்திப்பத்திரிகைகள், அரசியல் கட்சிகள், அமைப்புகளுக்கு சொந்தமான செய்திப் பத்திரிகைகள் ஆகியன தனியார் துறைக்கு உரித்தானவையாகக் கருதப்படுகின்றன.

## வானொலி

இத்தாலி நாட்டைச் சேர்ந்த குக்லியோ மார்க்கோனி என்பவரால் 1897 இல் வானொலி, இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது. 1906 ஆகும் போது நூறு மைல் தூரத்துக்கு வானொலிச் செய்தியை அனுப்பமுடிந்தது. 1908 இல் வானொலி பொதுசன ஊடகமாக ஏற்கப்பட்டது. 1920 களில் வானொலி இல்லங்களின் தொடர்பாடல் கருவியாக இடம்பெற்றது. அமெரிக்காவில் மார்க்கோனி வானொலி நிறுவனமானது, 1919 களில் வானொலி மக்களிடையே மிகப்பிரபல்யமாகிட பெரிதும் பணியாற்றியது. முறைசார்ந்த வானொலி நிகழ்ச்சியொன்று முதன்முதல் 1920 இல் ரஷ்யாவின் பீட்டர்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தில் முன்வைக்கப்பட்டது. 1923 இறுதிப்பகுதியில் அமெரிக்காவில் 600 இற்கு மேற்பட்ட வானொலிச் சேவைகள் பணியிலீடுபட்டி ருந்தன.

இந்தப் பின்னணி மிக முக்கியமடைவது, இலங்கையிலும் அதே கால கட்டத்தில் தான் வானொலிச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை விளங்கிக் கொள்வதற்காக ஆகும். 1922 இல் இலங்கை பயிலுநர் வானொலி சமூகம் என்கிற பொதுசன அமைப்பொன்றினால் வானொலி பற்றிய பரீட்சார்த்த முயற்சிஆரம் பிக்கப்பட்டது. முதன்முறையாக வானொலி நிகழ்ச்சியொன்று அரசாங்க ரெலிகொம் திணைக்களத்தினால் பரீட்சார்த்தமாக நிகழ்த்தப்பட்டது. இதற்காக ஜெர்மனிய பழுதடைந்த நீர்மூழ்கிக்கப்பலொன்றிலிருந்து கழற்றப்பட்ட வானொலித் தொடர்புக் கருவித்தொகுதியொன்று பயன்படுத்தப்பட்டது. இதன்படி பிரதான வானொலி தொடர்புப் பொறியியலாளர் ஈ.ஹாப்பர் என்பவரின் கண்காணிப்பில் 1924 ஜுன்

1 ஆம் திகதி செய்யப்பட்ட வானொலி ஒலிபரப்பே இலங்கையின் முதலாவது உத்தியோகப்பூர்வ வானொலி ஒலிபரப்பாகக் கருதப்பட்டது. இதன்படி ஆரம்ப காலந்தொட்டே வானொலியானது அரசுக்கு சொந்தமானதாயிருந்து வந்துள்ளமையைக் காணமுடிகிறது. 1925 டிசம்பர் 16ஆம் திகதி இலங்கையில் வானொலி ஒரு அரசாங்க நிறுவனமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது ஆசியாவின் முதலாவது வானொலி சேவையாகும். 1949 இல் டிசம்பர் 1 ந்திகதி முதல் 'ரேடியோ சிலோன்' என்கிற இலங்கை வானொலி சேவைத் திணைக்களம் நிறுவப்பட்டது. இலங்கை ஒலிபரப்புப் கூட்டுத்தாபனம் 1967 ஜனவரி 5ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

1991 வரை இலங்கையில் வானொலிச் சேவை அரச உரித்துடைமையின் கீழ் நடத்தப்பட்டு வந்தது. இதன்படி வானொலிக் கருவியொன்றினூடாக வானொலி சேவையைக் கேட்பதற்காக அனுமதிப் பத்திரமொன்றைப் பெற வேண்டியிருந்தது. 1991 இன் பின்பு இலங்கையின் வானொலிச் சேவைக்காக நிலவிய அரசாங்க உரிமை இரத்துச் செய்யப்பட்டது. 1991 இன் பின்னுள்ள காலப்பகுதியில் இவ்வனுமதிப் பத்திர முறையும் இரத்து செய்யப்பட்டது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தொடர்ந்து அரச உரிமையின் கீழ் செயற்படுவதோடு தனியார் துறை வானொலி சேவைகளையும் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டது. (இக்காலப்பகுதியில் இலங்கையில் தொலைக்காட்சி சேவையும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது குறிப்பிடத்தக்கது) தற்போது, பல்வேறு தனியார் துறையினரால் நடத்தப்படுகிற வானொலிச் சேவைகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 50 ஆகும். செய்திப்பத்திரிகைகள் உரிமை வகைப் படுத்தப்பட்டபடியே, வானொலிச்சேவை உரிமையும் கீழ்க் குறிப்பிடப்பட்ட விதத்தில் வகைப்படுத்த முடியும்.



4.2 இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனம்

### 1. அரசாங்க உரிமையுடனான வானொலிச் சேவைகள்

இந்தப்பிரிவில் முக்கியமாக இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனத்துக் குரித்தான சேவைகள் இடம் பெறுகின்றன. அவை தவிர அரசாங்கத்தால் சுவி கரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமான லக்ஹண்ட வானொலிச்சேவை அரசாங்கத்தின் வானொலிச் சேவையாகும்.

### 2. பொதுசன அமைப்புகளின் உரிமைத்துவத்துடனான வானொலிச் சேவைகள்

இதற்கு உரித்தாவது, தம்புள்ள வானொலிச் சேவை மட்டுமாகும். அது தொடக்ககால ஒரு அமைப்பாக நடத்தப்பட்டுவருகின்றது. அது தவிர டி.என். எல் வானொலிச்சேவையின் ஒலிபரப்பு நேரத்தைப்பெற்றுக்கொண்டு 'பௌத்தயா' என் னும் வானொலிச் சேவையும் வரையறுக்கப்பட்டதொரு காலப்பகுதிக்குள் ஒலிப ரப்பாகின்றது.

3. தனியார் வர்த்தக உரிமைத்துவத்துடனான வானொலிச் சேவைகள்

*அரசாங்க வானொலிகள் பொதுசன அமைப்புகளின் உரிமைத்துவத்தோடுள்ள வானொலிகளுக்கு அப்பாலுள்ள ஏனைய சகலமும் தனியார் வர்த்தக உரிமைத் துவத்தைக் கொண்ட வானொலிச் சேவைகள் ஆகும்.*

## தொலைக்காட்சி

*இலங்கையில் முதலாவது தொலைக்காட்சி சேவை ஒளிபரப்பு ஆரம்பமானது தனியார் உரிமைத்துவத்தின் கீழாகும். 1979 ஏப்பிரல் 13 ஆம் திகதியன்று இது நிகழ்ந்தது. இது சுயாதீனத் தொலைக்காட்சி சேவையென அழைக்கப்பட்டது. அனில் விஜேவர்த்தன, ஷான் விக்கிரமசிங்க மற்றும் பிரித்தானியரான பொபி கிறிஸ்ரி ஆகிய மூவருமே இதன் ஆரம்ப உரிமையாளர்கள் ஆவர். பின்பு 1979 ஜுன் 5ஆம் திகதி சுயாதீன தொலைக்காட்சி சேவை அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது. இதனால் அது தற்போது அரசாங்கத்துக்குச் சொந்தமான ஒரு நிறுவனமாக காணப்படுகிறது.*

*அரசாங்க உரிமைத்துவத்துடன் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் 1982 இல் ஆரம்பிக்கப்பட்டது. அது அரசாங்கக்கூட்டுத்தாபனமாக பாராளுமன்ற சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் பின்னான காலப்பகுதியில் தனியார் தொலைக்காட்சி சேவைகளுக்காக அரசாங்கத்தால் அனுமதிப்பத்திரம் வழங்கப் பட்டதோடு இதுவரை 20 தனியார் அலைவரிசைகள் இவ்வாறு நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்று ரன்கிரி தம்புள்ள சேவைக்கு சொந்தமான 'பௌத்தயா' அலைவரிசையாகும். ஏனைய அனைத்துமே தனியார் துறையினரால் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுள் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஆகிய இரண்டுசே வைகளையும் நடத்துகின்ற ஊடக நிறுவனங்கள் பலவும் அடங்குகின்றமையும் குறிப்பித்தக்கது.*

### வெகுசன ஊடக உரிமையில் அரசின் பங்களிப்பு

*இதுவரைக்கும் அரசாங்கத்துக்கு சொந்தமாகியுள்ள வெகுசன ஊடக நிறுவ னங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.*

### செய்திப் பத்திரிகைகள்

- *வரையறுத்த ஐக்கிய செய்திகள் பத்திரிகை நிறுவனம் என்கிற லேக் ஹவுஸ்நிறுவனம் (அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட பங்குரிமைகளைக் கொண்ட நிறுவனம்).*

### வானொலி

- *இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - (அரசாங்க கூட்டுத்தாபனம்) லக்ஹண்ட வானொலிச் சேவை (அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட பங்குகளை உரித்துடைய நிறுவனம்).*

**தொலைக்காட்சி**

- இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் (அரசாங்க கூட்டுத்தாபனம்) சுயாதீன தொலைக்காட்சி சேவை.

### (2) வெகுசன ஊடக நிறுவனங்களின் உள்ளகச் செயற்பாடுகள்

இலங்கையின் செய்திப்பத்திரிகைகள் , வானொலி, தொலைக்காட்சி எனும் அமைப்புகளை ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து, அவை இரண்டு விதமாகவே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

1. பாராளுமன்றச் சட்டத்தினால் கூட்டுத்தாபனமாக ஸ்தாபிக்கப்பட்டிருத்தல்
2. கம்பனிச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியாக நிறுவப் பட்டிருத்தல்.

அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஆகியவற்றின் முகாமைத்துவம் தொடர்பான கொள்கை ரீதியான தீர்மானங்கள் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அரச கூட்டுத்தாபனங்களின் அல்லது அரசுக்குரிய கம்பனியின் பணிப்பாளர்ச பை மற்றும் தலைவர் அரசினால் நியமனம் செய்யப்படுவர். ஏனைய பொதுசன ஊடகங்களில் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அதன் பங்குதாரர்கள் சிலரால் நியமிக்கப்படுவர். அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் அல்லது அரசுக்குச் சொந்தமான நிறுவனமொன்றில் பணிப்பாளர் சபையும் மற்றும் தலைவரும் அரசி னால் நியமிக்கப்பட்ட போதிலும், அரசாங்கம் நேரடிக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள இங்கு வழியமைத்துள்ளது.

தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினால் கொள்கை ரீதியான தீர்மானங்கள் எடுக்கப்படுவதோடு அவற்றை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்படுவது வெகுசன ஊடக நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியிடமாகும் இப் பதவி நிலையானது பொதுமுகாமையாளர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் எனும் பதவிப் பெயர்களால் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் இந்த உயரிய பதவிக்கு பணிப்பாளர் நாயகம் என்ற பெயரே உபயோகிக்கப்படுகிறது.

பணிப்பாளர் சபையின் உறுப்பினர் அல்லது தலைவர் பிரதம நிறைவேற்று அதிகாரியால் நியமிக்கப்படுகிற சந்தர்ப்பங்களுமுண்டு. எவ்வாறாயினும் கொள்கை தயாரித்தல், முகாமைத்துவம் போன்றவை பங்குடைமை உரிமையாளர்களிடமே கையளிக்கப்படுகின்றன. வெகுசன ஊடக நிறுவனத்தில் எஞ்சியுள்ள ஊடக வியலாளர்கள் பிரதம நிறைவேற்று அதிகாரியின் கீழ் இருப்பார்கள். ஊடக நடவடிக்கைகள் அவர்களாலேயே செயற்படுத்தப்படுகின்றன.

தலைவர்

பணிப்பாளர் சபை

பிரதம நிறைவேற்று அதிகாரி


ஊடகவியலாளர்கள்

வெகுசனம்

(ஊடக நிறுவனமொன்றின் முழு ஒழுங்கமைப்பு அட்டவணை)

செய்திப்பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களில் பிரதம நிறைவேற்று அதிகாரியின் கீழ் பிரிவுப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவது அவ்வவ் நிறுவனங்களில் ஊடக நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும் விதத்திற்கு இணங்கவேயாகும். உதாரணமாக, பல செய்திப்பத்திரிகைகள் வெளியிடப்படுகின்ற செய்திப்பத்திரிகை நிறுவனத்தில் சகல பதிப்பாசிரியர்களுக்கும் பொறுப்பாக கட்டுப்பாட்டுப் பதிப்பாசிரியர் ஒருவர் இருக்க முடியும். அவ்வச் செய்திப் பத்திரிகையில் பிரதம பதிப்பாசிரியர் இருப்பது அதன் பின்னராகும்.

செய்திப்பத்திரிகை நிறுவனமொன்றின் பொது ஒழுங்குக்கட்டமைப்பு பின்வருமாறு




உரு 4.3 செய்திப்பத்திரிகை நிறுவனமொன்றின் ஒழுங்கமைப்பின் கட்டமைப்பு

### பிரதம ஆசிரியர்

செய்திப்பத்திரிகையொன்றில் பிரதான ஊடகவியலாளர் அதன் பிரதம ஆசிரியரே ஆவர். பத்திரிகையின் உள்ளடக்கம், கட்டமைப்பு தொடர்பான முழுப்பொறுப்பினை வகிப்பவர் பிரதம ஆசிரியரே ஆவார். செய்திப் பத்திரிகையொன்றின் பதிப்பு வாக்கியங்கள் அல்லது ஆசிரியர் தலையங்கம் எழுதுதல் ஆகிய பொறுப்புக்கள் யாவும் பிரதம ஆசிரியரையே சாரும். விசேடமாக வழக்கு நடவடிக்கைகளில் இந்த சட்டரீதியான பொறுப்புக்கள் மிகவும் முக்கியமானதாகும். பிரதம ஆசிரியரின் கடமைகள் அவருக்கு கீழேயுள்ள பதவிகளை வகிக்கும் ஊடகவியலாளருக்கு பகிர்ந்தளிக்கப்படமுடியும்.

### பதில் ஆசிரியர்

தலைவர் இல்லாதபோது அவருக்குப் பதிலாகச் செயற்படுதல் பதில் ஆசிரியரின் முக்கிய கடமையாகும். அவ்விதமே சகல ஊடகச் செயற்பாடுகள் தொடர்பாகவும் விளக்கத்துடன் செயற்பட பதில் பதிப்பு ஆசிரியருக்கு நேரிடும்.

### செய்திப்பிரிவு

நாளாந்த அல்லது வாராந்த செய்திப்பத்திரிகையின் மிக முக்கிய பணியினை ஆற்றும் பிரிவாக இதனைக் காணலாம். இது உள்ளூர் செய்திகள் வெளிநாட்டு செய்திகள் என இருபிரிவுக்குள் அடங்கும். இவ்விருபிரிவுகளும் பாரியளவுடையதாக, உள்ளூர் செய்திப் பதிப்பாசிரியர் மற்றும் வெளிநாட்டு செய்திப் பதிப்பாசிரியர்களைக் கொண்டதாக விளங்குகின்றன. உள்ளூர்ச் செய்திகள், சில வேளைகளில் மாவட்டச் செய்திகள் எனவும் அழைக்கப்படும். இது தொடர்பாகப் பணியாற்றுகிற நிரந்தரப் பதவியுடைய நிருபர்கள் பதவி நிலை நிருபர்கள் எனவும் நிரந்தரப் பதவி இல்லாமல் தமது பிரதேசத்திலிருந்து செய்திகளை அனுப்புகிற நிருபர்கள், பிரதேச நிருபர்கள் எனவும் அழைக்கப்படுவர். ஒரே செய்தி நிறுவனத்தில் ஒவ்வொரு செய்திப் பத்திரிகைகளுக்காகவும் பிரதேச நிருபர்கள் வெவ்வேறாக இருந்தபோதிலும் சிலவேளைகளில் சில செய்திப் பத்திரிகைகளுக்காக கூட்டு நிருபர்கள் பணியில் இருக்கவும் கூடும். சாதாரணமாக, தேசியப்பத்திரிகையொன்றுக்கு இப்பிரதேச நிருபர்களின் எண்ணிக்கையானது 300 தொடக்கம் 600 வரையிலிருக்கும்.

### பதிப்புப்பிரிவு

செய்திப்பத்திரிகையின் செய்திப் பக்கங்களை பதிப்பிடும் நடவடிக்கை இப்பிரிவில் நடைபெறுகிறது. இவ்விதமாகச் செய்திகளை பதிப்பு செய்தலானது

‘‘செம்மையாக்கல்’’ என அழைக்கப்படும். இப்பணியைச் செய்வது, துணை ஆசிரியர் அல்லது உதவி ஆசிரியர்களாக இருப்பர். செய்தி நிருபர்களாலும் பதவிநிலை எழுத்தாளர்களாலும் வழங்கப்படுகிற தகவல்களைச் செய்திக்கு அவசியமானதாக மற்றும் ஏற்றவாறாகத் தயாரிப்பது இவர்களாவர். அதில் பக்கத்தின் இடவசதி மற்றும் தகவலின் முக்கியத்துவத்துக்கிணங்க அவை பிரசுரமாக வேண்டிய அளவினை தீர்மானித்தல், அச்செய்திக்குத் தலைப்பொன்றை இடுதல் என்பன இவர்களால் நிகழ்த்தப்படும். இப்பிரிவின் தலைவர், பிரதம ஆசிரியர் எனும் பெயரில் அழைக்கப்படுவர்.

### சிறப்பு அம்சப்பிரிவு

செய்திகளுக்கு மேலதிகமாக பல்வேறு சிறப்புத் தலைப்புகளின் கீழான பக்கங்கள் அல்லது இணைப்புகளைப் பிரசுரித்தல் செய்திப்பத்திரிகைகளின் பழக்கமாகும். இதன் மூலமாக வாசகர் கூட்டத்தை அதிகரித்துக் கொள்ள முடியும். உதாரணமாக மகளிர் பக்கம், அலங்கார பக்கம், தொழில் முயற்சியாளர் பக்கம், பௌத்த, இந்து, கத்தோலிக்க, இஸ்லாம் சமயங்களுக்கான தனிப்பக்கங்கள், இலக்கியம் மற்றும் கலைகள் பக்கம், சினிமா மற்றும் நாடகம் பற்றிய பக்கம் ஆகியவற்றை வாசகர்களுக்கு வெளியிட முடியும். இவை சிறப்புப்பக்கங்கள், அல்லது மேலதிக இணைப்புகள் என சிறப்புப்பெயர்களில் அழைக்கப்படும். இந்த சிறப்பு அம்சங்களுக்குப் பொறுப்பாக சிறப்பு அம்ச ஆசிரியர் ஒருவர் செயலாற்றுவார். அந்த சிறப்புப்பக்கங்களைத் தயாரிக்கும் பணி அவருடையதாகும். பத்திரி கையொன்றின் அனைத்து சிறப்பு அம்சங்களுக்கும் பொறுப்பாக இருப்பவர் சிறப்பம்ச ஆசிரியராவார். பத்திரிகையின் கார்ட்டூன் கேலிச்சித்திரமும் சிறப்பம்சமாகவே கருதப்படும்.

### புகைப்படப்பிரிவு

செய்திகளுக்குப் பொருத்தமான புகைப்படங்களை வழங்குதல் இப்பிரிவின் பொறுப்பாகும். இப்பிரிவின் தலைவர் புகைப்படங்களுக்கான ஆசிரியராவார். பதவி நிலைப் புகைப்படக் கலைஞர்கள் இப்பிரிவில் நிரந்தர பணிக்குழுவினராகச் செயலாற்றுவர். இதற்கு மேலதிகமாக பிராந்தியப் புகைப்படக் கலைஞர்களும் இப்பிரிவுக்கு புகைப்படங்களை வழங்குவர். இன்று சகல செய்திப் பத்திரிகை நிறுவனங்களிலும் புகைப்படப்பதிப்பானது கணினித் தொழினுட்பத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

**சித்திர ஆக்கங்கள், படவுருக்கள் திட்டமிடல் பிரிவு**


செய்திப் பத்திரிகைக்குத் தேவையான சித்திர ஆக்கங்களை சித்திரக் கலைஞர்கள் அல்லது ஓவியர்கள் கீறி வழங்குவர். அவர்களது கைகளால் அல்லது கணினியூடாக சித்திரங்கள் ஆக்கப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி பக்கமொன்றின் வடிவமைப்பு மற்றும் படவுருக் கோலங்களைத் திட்டமிடலானது தற்போது கணினி வழியாகவே மேற்கொள்ளப்படுகின்றது. சித்திர, படவுரு கோலத் திட்டமிடல் பதிப்பாசிரியர் இப் பிரிவின் தலைவர் ஆவார். நிரந்தர சேவைபுரியும் ஓவியக் கலைஞர்களும், பணிக்கப்படும் வேலைகளுக்கான சித்திரங்கள் வழங்கும் கலைஞர்களும் இப்பிரிவுடன் தொடர்பற்றுப் பணியாற்றுவர். இவர்களுடன் பெரும்பாலும் வடிவமைப்பு மற்றும் படவுரு கோலத் திட்டமிடல் பணியைச் செய்கிற கணினி ஆக்கங்களின் கலைஞர்களும் செய்திப் பத்திரிகை நிறுவனத்தின் உள்ளகக் பணிக் குழுவைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுவர்.

**விளம்பரப் பிரிவு**

செய்திப் பத்திரிகையொன்றின் முக்கியமானதொரு அம்சம் விளம்பரமாகும். அது செய்திப்பத்திரிகையின் பிரதான வருமான மார்க்கமாகும். விளம்பரங்கள் பிரிவு மற்றும் பதிப்பாசிரியர் பிரிவுகளுக்கிடையே நேரடித் தொடர்பு உள்ளது. விளம்பரப்பிரிவினால் அவ்வவ் பக்கங்களுக்கான இடவசதிகளை வேறாக்கிக் கொள்வதே முதலில் நிகழ்கின்ற விடயமாகும். இதனை விளம்பரப் பிரிவு செய்கின்றது. பதிப்பாசிரியர் பிரிவு அவ்வவ் பக்கங்களின் எஞ்சிய வெற்றிடங்களைத் தமது ஊடக நடவடிக்கைகளுக்குத் திட்டமிட்டுக்கொள்ள வேண்டும்.

## 3) வானொலி நிறுவனமொன்றின் உள்ளகச் செயற்பாடுகள்

செய்திப் பத்திரிகை நிறுவனமொன்றின் ஒழுங்குக் கட்டமைப்பு இதற்கும் பொருந்துகிறது. ஆனால் ஊடகச் செயற்பாடுகளிலேயே அது வேறுபடுகின்றது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஒழுங்கமைப்புத் திட்டத்துக்கும் ஏனைய தனியார் வானொலி அலைவரிசைகளுக்குமிடையே வேறுபாடு காணப்படுகிறது. தனியார் வானொலிச் சேவைகளில் காணப்படும் சிறப்பியல்பு யாதெனில், குறைந்தளவு ஆளணியுடன் செயற்படுவதும் கணினித் தொழினுட்பத்தை உச்சளவு பயன்படுத்துதலுமாகும். அவ்வாறே செலவுகளைக் குறைப்பதுவும் அவற்றின் நோக்கங்களுள் ஒன்றாகும். இதனால் முன்னரே தயாரிக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் தனியார் அலைவரிசைகளில் ஒலிபரப்பாவது மிகக் குறைவாகும். அதிகளவில் நேரடி ஒளிபரப்பே நடைபெறுகிறது. வானொலி அலைவரிசைகளின் உள்ளக செயற்பாடுகள் இவ் வேறுபாடுகளின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது.




இலங்கை வானொலியின் ஆரம்பம்
உரு 4.1

## 4) வானொலி நிறுவனமொன்றின் பிரிவுகள்

### ❒ செய்திப் பிரிவு

வானொலிச் சேவையொன்றில் செய்திப்பிரிவு மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஆரம்பகாலத்தில் நாளொன்றுக்கு மூன்று தடவைகள் மட்டுமே செய்திகள் ஒலிபரப்பப்பபட்ட போதிலும், தற்போது மணித்தியாலத்திற்கொருமுறை குறுஞ்செய்திகளும் நாளொன்றுக்கு மூன்று தடவைகள் பிரதான செய்திகளும் வானொலி ஊடகங்களில் ஒலிபரப்பாகின்றன.

இதன்படி நாடுமுழுவதிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிருபர்கள் வழியாக செய்திப்பிரிவுக்கு கிடைக்கின்ற உள்ளகச் செய்திகளை யும் வெளிநாட்டுச் செய்திகளையும் தெரிந்தெடுத்து செய்தி யறிக்கையைத் தயாரிப்பது செய்திப்பிரிவின் பணியாகும். இந்தப் பிரிவிலுள்ள செய்திப்பதிப்பாசிரியர்களினால் செய்திப் பிரதிகள் தயாரிக்கப்படுகின்றன.

### ❒ நிகழ்ச்சிப்பிரிவு

வானொலி நிகழ்ச்சிகள் இங்கு தயாரிக்கப்படும். சிறுவர், சமயம், இசை, கலந்துரையாடல் போன்ற பிரிவுகளை இங்கு காணமுடியும். நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களும், அறிவிப்பாளர்கள் மற்றும் முன்வைப்பாளர்கள் அல்லது அளிக்கையாளர்கள் ஆகியோர் இப் பிரிவுகளில் பணிபுரிவர்.

தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை

↓

பிரதம நிறைவேற்று அதிகாரி

↓

நிர்வாகம் மற்றும் நிதி | விளம்பரம் | வானொலி ஊடகம் | தயாரிப்பும் சந்தைப்படுத்தலும்

↓

செய்தி / சிறுவர் / சமய நாடகம் / இசை / விசேட ஆகிய பிரிவுகளின் பணிப்பாளர்கள்

↓

நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளர்கள் அல்லது ஒழுங்கமைப்பாளர்கள்

↓

நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள்

↓

அமைப்பாளர்கள்

↓

அறிவிப்பாளர்கள் / முன்வைப்பாளர்கள்

↓

தொழினுட்ப உதவியாளர்கள், நிருபர்கள், விசேடப் பிரிவு எழுத்தாளர்கள்

உரு 4.9

உரு 4.10
வானொலி ஊடக நிறுவனத்தின் ஒழுங்குக் கட்டமைப்பு

### ❒ தொழினுட்ப கலைஞர்கள்

வானொலிக் கலையகத்தின் செயற்பாடுகளுக்காக பழைய இயந்திர உபகரணங்களைபயன்படுத்தும்போது தொழினுட்ப கலைஞர்களின் தேவைப்பாடு அதிகமாக இருந்தது. அவ்வாறே முன்னரே தயாரிக்கப்படும், பதிவு செய்யப்படும் நிகழ்ச்சிகளுக்காகவும் தொழினுட்பக்கலைஞர்கள் அதிகம் தேவைப்படுகின்றனர். இருப்பினும் தற்காலத்தில் நேரடி ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் ஏராளமாக நடைபெறுவதனாலும் கணினித் தொழினுட்பக் கருவிகள் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதனாலும் அறிவிப்பாளர்கள், முன்வைப்பாளர்கள் மற்றும் தொழினுட்பக் கலைஞர்கள் ஆகிய மூவரினதும் பணிகள் ஒரே ஊடகவியலாளரினால் நிறைவேற்றப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

### ❐ விளம்பரப் பிரிவு

வானொலி நேரம் சந்தைப்படுத்தப்படுவது இந்தப் பிரிவினாலேயே ஆகும். வானொலிச் சேவைக்கு வருமானம் பெற்றுத் தருவது இதன் மூலமே ஆகும். இதனால் இன்று நேரடி விளம்பரங்களைப் போன்றே அனுசரணை விளம்பரங்களும் வானொலி ஊடகத்தின் வழியாக ஏராளமாக ஒலிபரப்பாகின்றன. செய்திகளும் அவ்விதமே சந்தைப்படுத்தப்படுகிற பண்டமாக விளங்கும் நிலை இன்று காணப்படுகின்றது.

## 2) தொலைக்காட்சி நிறுவனமொன்றின் உள்ளகச் செயற்பாடுகள்




உரு 4.11 தொலைக்காட்சி நிறுவனங்கள்

வானொலி நிறுவனமொன்றின் ஒழுங்குக் கட்டமைப்பு இங்கும் பொருத்த மாயுள்ளது. ஆனால் ஊடக செயற்பாடுகளிலேயே இங்கு வேறுபாடு காணப்படு கின்றது. இது செவிப்புல - கட்புல அசையும் ஊடகமாவதன் காரணமாக தொழி னுட்ப செயற்பாடுகளுக்கு இதில் அதிக முக்கியத்துவம் தரப்படுகின்றது. வானொலிச் சேவையோடு ஒப்பிடும்போது தொலைக்காட்சி சேவையில் சிறப்புகள் பல காணப்ப டுகின்றன. அதாவது, வேடம் புனைதலும் பின்புல நிர்மாணிப்பும், அரங்க முன்வைப்பும் இங்கு கூடுதலாக நிகழ்கின்றன. அவ்வாறே சகல செய்திகளையும் கண்களால் பார்க்க முடிகின்றன. காதால் கேட்கவும் முடிகிறது. தொலைக்காட்சி நாடகமென்னும் படைப் பானது, பிரதியினால் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படுபவையாகும். இவை தவிர தொலைக்காட்சிச் சேவையில் அதற்கே உரித்தான பல்வேறு நிகழ்ச்சிகள் தயாரிக்கப் படுகின்றன.

செய்திகள், குறித்த விசேட காலத்துக்குரிய நிகழ்ச்சிகள், கல்வி நிகழ்ச்சிகள், சிறுவர் நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், நாடக நிகழ்ச்சிகள், மெய்மை (Reality) நிகழ்ச்சிகள், குரல் கொடுத்தல் (Dubbing) போன்ற பல்வேறு பிரிவுகள் தொலைக்காட்சி நிறுவனமொன்றில் காணப்படுகின்றன. எந்தப் பிரிவினைக் கொண்டுநடத்த வேண்டுமென்பதைத் தீர்மானிப்பது அவ்வத் தொலைக்காட்சிச் சேவையே ஆகும்.

இங்கு ஒவ்வொரு பிரிவுத்தலைவருக்கும் துணையாக, தொழினுட்ப, தயாரிப்பு பிரிவுகளும் செயற்படுகின்றன.

## ❒ செய்திப் பிரிவு

செவிப்புல - கட்புல, அசைவு எனும் படியாக செய்திகளை அறிக்கையிடல் தொலைக்காட்சி சேவையின் பணியாகும். செய்திப் பத்திரிகை வானொலி சேவை ஆகிய சேவைகளுக்கில்லாத பிரச்சினைகளுக்கு தொலைக்காட்சி செய்திப் பிரிவினர் முகங்கொடுக்க வேண்டிநேரிடுகிறது. இலங்கையை உதாரணமாகக் கொண்டால், எங்கேயோ நடக்கிற செய்திப் பெறுமதியுள்ளதொரு சம்பவம் பற்றிய தகவலை காட்சி ஊடக வழியாக பெற்றுக் கொள்ள வேண்டியது செய்திப் பிரிவின் பணியாகும். இதற்காக நிரந்தரச் சேவையிலீடுபடுகிற செய்தி நிருபர்கள் குழு பயன்படுத்தப்படுகின்றது. அது தவிர பிராந்திய ரீதியாக ஈடுபடுத்தப்பட்டுள்ள சுயாதீன நிருபர்களூடாகவும் காட்சிமய அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. வெளிநாட்டுச் சேவைகள் வழியாக இணைய வலைப் பின்னலூடாக வெளிநாட்டு காட்சிசார் செய்திகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.செய்தி நிகழ்ச்சித் தயாரிப்புப் பிரிவானது மிகவும் பரபரப்பான செயல்கள் நிறைந்ததொரு இடமாகும். ஏனைய பிரிவுகளுக்கு தமது நிகழ்ச்சிகளைத் தயாரித்துக் கொள்ள ஆறுதலாக போதுமான காலத்தை எடுத்துக்கொள்ளலாம். ஆனால் செய்திப்பிரிவுக்கு காலமானது எப்போதுமே ஒரு சவாலாகவே இருக்கும்.

உரு 4.12

## ❒ நிகழ்ச்சிப் பிரிவு

தொலைக்காட்சியில் உள்ள சிறப்பியல்பு யாதெனில் பெரும்பாலான சகல நிகழ்ச்சிகளும் அனுசரணையாளர் நிகழ்ச்சிகளாகக் காணப்படுதலாகும். உள்ளடக்கம், வடிவம் ஆகியனவற்றைத் தெரிந்தெடுப்பதுவும் நிகழ்ச்சிகளை உருவாக்குவதும், தயாரித்தலும், முன்வைத்தலும் அவ்வவ் நிகழ்ச்சிப் பிரிவினது கடமைப்பொறுப்பாகும். அப்பணியை நிகழ்ச்சித் தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர்கள் செய்கின்றனர், இங்கு நிகழ்ச்சியை ஆக்கபூர்வமானதாக முடித்துத்தருவதற்கு தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தும் நபர் தயாரிப்பாளர் ஆவார்.

## ❒ தொழினுட்ப கலைஞர்கள்

தொலைக்காட்சி சேவையொன்றில் நிகழ்ச்சிகளைத் தயாரித்திடவும் முன் வைத்திடவும் தொழினுட்பக்கலைஞர்களின் உதவி அவசியமாகும். தொலைக் காட்சித் தொழினுட்பமானது நாளுக்குநாள் புதிதாகின்றபடியால் பயிற்றப்பட்ட தொழினுட்ப கலைஞர்களைப் பயன்படுத்துவதென்பது பெருஞ் சவாலாகும். எப்படி

யாயினும் நிகழ்ச்சிகளின் பண்புத்தரத்தைப் பேணிக்காக்க முடிவது, அதற்காக பயன் படுத்தப்படுகிற நவீன தொழினுட்ப கருவிகள் மற்றும் அவற்றைக் கையாளுகிற தொழினுட்பக் கலைஞர்களின் ஒத்துழைப்பு அடிப்படையிலேயே ஆகும்.

### ❒ விளம்பரப் பிரிவு

வானொலிச் சேவையைப் பார்க்கிலும் தொலைக்காட்சி சேவையில் நிகழ்ச்சித் தயாரிப்புச் செலவு அதிகமாகும். இதன் காரணமாக, தொலைக்காட்சி ஒளிபரப்பு நேரத்தை ஒரு வருமானமாக ஆக்கிக்கொள்ள நேரிட்டுள்ளது. இதன்படி நேரடி விளம்பரங்களுக்காக பணம் அறவிடுதலும் நிகழ்ச்சி ஒளிபரப்புக்காக அனுசரணை யாளர்களைப் பெற்றுக்கொள்ளுதலுமாகிய பணிகள் இரண்டு இங்கு நடைபெறுகின்றன. ஜனரஞ்சகமான நேரங்களில் குறிப்பாக அதிகளவு நேயர்கள் தொலைக்காட்சியைப் பார்க்கும் நேரங்களில் தொலைக்காட்சி விளம்பரங்களை திரையிடச் செலுத்தவேண்டிய கட்டணம் மிக உயர்வானதாகும்.

## 4.2 வெகுசன ஊடக நிறுவனங்களின் உரிமையாண்மை நேயர்களில் / பெறுநர்களில் ஏற்படுத்தும் பாதிப்புகள்

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது வெகுசன ஊடக நிறுவனங்களின் உரி மைத்துவம் அதன் கொள்கைகளை நேரடியாகப் பாதிக்கிறது. அக்கொள்கைகள் நிறுவனத்தின் ஊடகவியலாளர்களால் செயற்படுத்தப்படுகின்றன. எனவே ஊடக வியலாளர்களால் செயற்படுத்தப்படுகிற ஊடகச் செயற்பாடுகளில் உரிமையாளர் களின் கொள்கைகள் உட்பொதிந்திருப்பதைத் தவிர்க்க முடியாது. இறுதியாக, பெறுநர்களை நோக்கி அண்மிக்கிற ஊடகச் செய்திகளில் ஊடக உரிமையாளர்களின் கொள்கைகள் பிரதிபலிப்பதை இவ்விதம் அடையாளம் காணலாம்.



உரு 4.14
டி. ஆர். விஜேவர்தன

வெகுசன ஊடக உரிமையாண்மையை ஆராயும்போது, தெரியவருவது, அரசுக்குச் சொந்தமான வெகுசன ஊடகங்கள் ஒரு பக்கத்திலும், தனியார் உரிமைத்துவமுடைய வெகுசன ஊடகங்கள் மறு பக்கத்திலும் செயற்படுவதாகும்.

பொதுவுடைமை அரசான மக்கள் சீனாவிலோ அல்லது ரஷ்யாவிலோ வெகுசன ஊடகத்தை நடத்தும்போது தனியார் துறையினரின் பங்களிப்பு இல்லாத நிலையில் அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் பிரித்தானிய போன்ற மேற்கத்தேய நாடுகளில் வெகுசன ஊடகங்களில் தனியார்துறையின் உரிமைத்துவம் உச்சமாக காணப்படுவதை நோக்கமுடியும்.

சமூகவுடைமை / பொதுவுடைமை நாடுகள் தவிர்ந்த ஏனைய சகல நாடுகளிலும் செயற்படுகிற ஊடகங்களின் இருப்பானது, அந்நிறுவனங்கள் சம்பாதிக்கின்ற வருமானத்தின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இதனால் இந்த வெகுசன ஊடக நிறுவனங்கள் எப்போதும் அதிகளவிலான நேயர்களைக் கவர்ந்திழுக்கக்கூடிய நிகழ்ச்சிகளை முன்வைப்பதிலேயே அதிக கவனமும் ஊக்கமும் எடுக்கின்றன. இந்த இயல்பானது தனியார்துறையைப் போலவே அரசாங்க ஊடகங்களையும் ஒரேவிதமாகப் பாதிக்கின்றது. இலங்கையில் அரசாங்க வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் ஆரம்பகாலத்தில் பொதுமக்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கி வருமானம் பெற்றுக்கொண்டாலும் இன்று அவை ஏனைய தனியார் வெகுசன ஊடக நிறுவனங்களைப்போல வருமானங்களைப் பெற்றுக்கொள்ளும் நிறுவனங்களாக உள்ளன. அதிகளவில் வருமானத்தை சம்பாதிக்கக்கூடிய ஊடக வடிவமைப்பை உருவாக்கிக்கொள்ளும் ஊடக வர்த்தகமே இங்கு முக்கிய குறிக்கோளாகின்றது.

## 01) வெகுசன ஊடகநிறுவனங்களின் உரிமையாண்மையும் மற்றும் நிறுவனம்சார் கொள்கைகளும்

வெகுசன ஊடக நிறுவனமொன்றின் உரிமைத்துவம் நிரூபணமாவது அதன் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் மற்றும் தலைவராக நியமிக்கப்படுவோர் குறித்த ஊடகத்தின் உரிமையாளர்களாகவோ அல்லது அவர்களது பிரதிநிதிகளாகவோ இருப்பதன் மூலமாகும்.

ஒரு வெகுசன ஊடக நிறுவனத்தின் கொள்கைகள் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டபோதிலும் அது செயற்படுத்தப்படுவது ஊடகவியலாளர்களாலேயே ஆகும். அங்கு அந்தந்த வெகுசன ஊடக நிறுவனங்களின் நடவடிக்கைகள் செலுத்தப்படுகிற திசை பற்றி பிரதான ஊடகவியலாளர்கள் உடன்படுவதோடு அதனை நடைமுறைப்படுத்தித் தேவையான நடவடிக்கைகளையும் அவர்கள் மேற்கொள்வர் உதாரணமாக, குறிப்பிட்ட ஊடக நிறுவனம் புகையிலை மற்றும் போதைவஸ்து தொடர்பாக காட்சிகளை ஒளிபரப்புவதைத் தவிர்த்துக்கொள்ளுவது இவ்வகையினதாகும்.

இவ்விதமாக இலங்கையிலோ வெளிநாட்டிலோ வானொலி, தொலைக் காட்சி மற்றும் செய்தித்தாள்களின் கொள்கைகளை நேரடி உரிமைத்துவத்துக்குப் புறம்பாக பகுப்பாய்வு செய்திடமுடியாது. சிலவேளைகளில் ஏதேனும் வெகுசன ஊடக நிறுவனத்தின் உரிமையாளர்கள் தமது ஊடகக் கொள்கைகளை மிகவும் விசாலமாகப் பேணிவரமுடியும். அத்தகைய பொழுதுகளில் ஊடகவியலாளர்களுக்கும் மிகவும் விரிவான முறையில் தமது ஊடகச் செயற்பாடுகளைப் பேணி நடத்திடவும் முடியும். எவ்வாறெனினும், அந்த எல்லையை மீறிச்செல்ல முடியாது. மேலும், வெகுசன ஊடக நிறுவனம் தமது கொள்கையை மிகவும் வரையறுத்த சட்டகமொன்றுக்குள் எப்போதும் மீண்டும் கொண்டுவரவும் முடியும். அப்போது ஊடகவியலாளர்கள் அவ்வெல்லைக்குள் நின்று செயற்படவேண்டி நேரிடும்.

## 02) வெகுசன ஊடகநிறுவனங்களின் உரிமையாண்மையும் ஊடகவியலாளர்களும்

ஒரு நாட்டிலுள்ள அனைத்து ஊடகவியலாளர்கள் அல்லது ஊடகப் பணி யாளர்களை வகைப்படுத்தும்போது அவர்களை இரு பிரிவுக்குள் அடக்கலாம். அவையாவன

01) நிறுவனமொன்றுடன் தொடர்புடைய ஊடகவியலாளர்கள்

02) சுதந்திர அல்லது சுயாதீன ஊடகவியலாளர்கள் (தற்போது பிரசைகள் ஊடகவியலாளர் என்ற பிரிவொன்றும் உள்ளது)

அனைத்து வெகுசன ஊடக நிறுவனங்களும் தமது நிரந்தரப் பணிக் குழுவில் ஊடகவியலாளர்களையும் வைத்திருக்கவேண்டி நேரிடும். அதன் பொருட்டு தமது ஊடக நிறுவனத்தின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் ஊடக வியலாளர்களையே அவர்கள் தெரிவு செய்துகொள்வர். அவ்வாறு தெரிவு செய்யப்படும் ஊடகவியலாளர்கள் தமது ஊடகத்தின் ஊடகக்கொள்கைக்கிணங்கவே தமது சேவை, தமது ஆக்கத்திறன் ஆகியவற்றை நிறுவன அபிவிருத்திக்குப் பயன்படுத்துவர்.

### ஊடக நிறுவனமொன்றுடன் தொடர்புடைய ஊடக உழைப்பாளர்கள்

1. பதவிநிலை ஊடகவியலாளர்கள்
2. பிராந்திய ஊடகவியலாளர்கள்

என்னும் இரு வகைப்படுவர். பதவிநிலை ஊடகவியலாளர்களே தொழில் சார் ஊடகவியலாளர்களாகக் கருதப்படுவர். அதாவது, அவர்கள் வெகுசன ஊடக நிறுவனத்தில் மாதாந்தச் சம்பளம் பெறுகின்ற ஊடக உழைப்பாளர்கள் ஆவர். பிராந்திய ஊடகவியலாளர்கள் என்பவர்கள் பகுதிநேர ஊழியராக, ஏதேனும் ஊடக நிறுவனத்திற்கு தமது சேவையை வழங்குகிற, அவ்வூடக நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டு இருக்கிற, தாம் செய்கின்ற சேவையினளவுக்கு மட்டும் கொடுப்பனவுகளைப் பெறுகின்ற ஊடக உழைப்பாளர்கள் ஆவார். பிராந்திய ஊடகவியலாளர்கள் வேறொரு தொழில் செய்வதோடு அல்லது வேறொரு தொழிலைச் செய்துவிட்டு ஓய்வு பெற்றநிலையில் ஊடக உழைப்பாளர்களாக இணைந்து செயலாற்றுபவர்கள் ஆவார்.

தொழில்சார் அதாவது பதவிநிலை ஊடகவியலாளர்கள் நிறுவனத்தினால் ஈடுபடுத்தப்படுகிற ஊடகப் பணியொன்றை நிறைவேற்றும்படியாகச் சேவைபுரிய வேண்டும். சம்பளத்துக்கு மேலதிகமாக அவர்களுக்கு சேவை வசதிகளும், சலுகைகளும் பதவியுயர்வுகளும் உரித்தாகும். பிராந்திய நிருபர்களும், குறிப்பிட்ட காலம் சேவையாற்றிய பின்பு பதவிநிலை ஊடகவியலாளராக நியமனம் பெறமுடியும் அவ்வாறு அப்பதவியிலும் நீண்டகால சேவையாற்றிய பின்பு அத்துறையில்

உயர்பதவிகளுக்கும் நியமனம் பெறமுடியும். உதாரணமாக, செய்திப்பத்திரிகையின் பிரதான பதிப்பாசிரியராகவும் அவர்களால் வரமுடியும்.

சாதாரணமாக பிராந்திய நிருபர்கள் குறிப்பிட்ட அதிகாரத்துக்குட்பட்ட பிரதேச தகவல்களை அறிக்கையிடப் பயன்படுத்துவர். வழங்கப்படுகின்ற தகவல்களுக்கேற்ப அறிக்கை வெளியிடப்படுகிற அல்லது ஒலிபரப்பப்படுகின்ற விதத்துக்கேற்ப அவர்களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

## 03) ஊடகவியலாளர்கள் மற்றும் நேயர்கள்/ பெறுநர்கள்

பெறுநர்களை அண்மிப்பவர்கள் ஊடகவியலாளர்களே ஆவர். செய்திப் பத்திரிகையில், வானொலிச் சேவையொன்றில், தொலைக்காட்சிச் சேவையில் செய்திகள் அல்லது வேறு விசேட அம்சம் முன்வைக்கப்படுவது ஊடகவியலாளர் களாலேயேயாகும். அவற்றில் செய்தி நிருபரின் பெயர், செய்தி தயாரிப்பாளரின் பெயர், செய்தி அறிவிப்பாளரின் பெயர், ஆகியவற்றோடு ஊடக செயற்பாடுகளில் பங்கேற்கும் அனைத்து பிரதான மற்றும் பகுதிநேர ஊடகவியலாளர்களின் பெயர்களையும் நேயர்கள் (பெறுநர்கள்) தெரிந்து கொள்ளமுடிகிறது. இருந்தபோதிலும், அந்த ஊடக நிறுவனத்தின் பின்னணியிலுள்ளவர்கள் யாரென்பது பற்றி பெறுநர்களுக்கு வெளிப்படுத்தப்படுவதில்லை. அதுமட்டுமல்ல அதன் பின்புலத்திலுள்ளவர்களுடன் பெறுநருக்கு எதுவித கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்ளப்படுவதுமில்லை.

இதன்படி தெரியவருவது, ஊடக நிறுவன உரிமையாளர்களின் கருத்துக்களை, பெறுநருக்கு கொண்டு செல்பவர் இடைநடுவிலான ஆக்கபூர்வ நபர் ஒருவர் ஆவர். ஊடக நிறுவன உரிமையாளர்களின் கருத்துக்கள் இறுதியான தீர்ப்பும் அல்ல. அவை நேரடியாக பெறுநர்களுக்கு முன்வைக்கப்பட முடியாது. அதனால் இதற்காக இடைநடு ஊடக உழைப்பாளர் ஒருவரைப் பயன்படுத்தி உரிமையாளரின் அபிப்பிராயங்கள் ஆக்கபூர்வமான மாதிரியொன்றாக மாற்றப்படுகிறது. அந்த தொடர்பாடல் மனதால் உணரக்கூடியது, இரசனை மிக்கது, எண்ணங்களை மாற்றக்கூடியது, பெறுநர்களால் உள்வாங்கக்கூடியது.

இவ்விதமாக முன்வைக்கப்படுகிற பெரும்பாலான ஊடக மாதிரிகளின் உள்ளடக்கம் பெறுநனுக்குப் பாதகமானதென்பது இதன் கருத்தல்ல. பெறுநன், இவற்றின் உள்ளே அடங்கியுள்ள உண்மையான கருத்தைக் கிரகித்துக் கொள்ளவதிலும் பகுத்தறிந்து கொள்வதிலும் சித்தியடைய வேண்டும். ஊடகவியலாளர்கள் சமூகத்திலிருந்தே தோன்றுகின்றனர். அதனால் சமூகத்துக்கு ஏதாவது செய்ய வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கிறது. இவை மட்டுப்படுத்தப்படுவது அவ்வவ் நிறுவனங்களின் கொள்கைகளுக்கு இணங்கவேயாகும். சிலவேளைகளில் குறிப்பிட்ட எல்லைக்குள், மக்களுக்காகத் தமது கடமைகளை ஓரளவுக்காவது நிறைவேற்றிட ஊடகவியலாளர்களுக்கு சந்தர்ப்பம் அமைக்கப்படுகிறது.

ஊடகப் பயன்பாட்டில் எவ்வித விமர்சனம் இருந்தபோதிலும் அதன் இறுதிநோக்கமாவது, பெறுநர் குழுவை அதிகரித்துக் கொள்வதேயாகும். அப்படி இல்லாதுபோனால் அந்த ஊடகத்துக்கு இருப்பொன்று இல்லாது போய்விடும். இந்த பெறுநர் குழுவானது வயது வந்தோர், இளைஞர், பாலகர், முதியோர், ஆண்கள், பெண்கள் போன்ற எல்லாவகையினரையும் கொண்டதாக உள்ளது. அவ்வாறே நகர்ப்புற, கிராமப்புற மக்கள் என்பதாகவும் உயர்வகுப்பினர், மத்தியதர வகுப்பினர், கீழ்மட்ட வகுப்பினர் என்பதாகவும் வகைப்படுத்திட முடியும். ஊடகச் செயற்பாடுகளின் பின்னால் வர்த்தகர்கள் இருப்பதோடு சிலவேளைகளில் வர்த்தகர்கள் அல்லாத அனுசரணையாளர்களும் இருக்கக் கூடும். உதாரணமாக சூழலைப் பாதுகாக்கின்ற நிகழ்வொன்றுக்காக, சூழல் பாதுகாப்பு அதிகாரசபையினால் அனுசரணை அளித்திட முடியும். எந்த ஒழுங்கமைப்போ அல்லது வர்த்தக அமைப்போ, நிகழ்ச்சியொன்றுக்காக அனுசரணை அளிப்பது அது குறுகிய காலத்தில் அல்லது நீண்டகாலத்தில் பயனளிப்பதாக இருந்தால் மட்டுமே ஆகும். நிகழ்ச்சிகளின் வழியாக அப்பயன்பாட்டை உயர்த்துவதற்காக நடவடிக்கை எடுக்கும்படியாக ஊடக உழைப்பாளருக்கு அழுத்தம் நேரிடலாம். இதில் புலனாவது யாதெனில், ஊடக நிறுவன உரிமைத்துவம், ஊடகவியலாளர் (ஊடக உழைப்பாளர்) மற்றும் பெறுநர்களுக்கிடையிலான தொடர்பு மிகவும் சிக்கலாகின்றமையே ஆகும். வெளித்தோற்றத்தில் தெரிகின்றவை மற்றும் உணர்கின்றவைகளையும் விட இது மிகவும் ஆழமானதாகும். கண்ணுக்கு தெரியாததும் உணரப்படாததுமான நிகழ்ச்சிநிரலையுள்ளடக்கியதும் ஆகும். அப்படியிருந்தபோதிலும், எந்த ஊடக நிறுவனமாக இருப்பினும், அதன் இருப்பு தொடர்ந்து பேணப்படுவது பெறுநர்களை அடிப்படையாகக் கொண்டேயாகும். பெறுநர்கள் புத்திசாலிகளாயின், ஊடகம் மற்றும் நிகழ்ச்சிகளைத் தெரிந்தெடுத்து பயன்படுத்துவார்களாயின், எந்தவொரு ஊடகத்துக்கும் பெறுநர்களின் கருத்தை மீறிச் செல்ல முடியாது. எனவேதான், நாட்டின் அனைத்து பிரசைகளுக்கும் ஊடகத்தைச் சரியாகப் பயன்படுத்தும் ஆற்றல் அல்லது ஊடகம் பற்றிய அடிப்படையறிவு இருப்பது அவசியமெனக் கருதப்படுகிறது வேண்டும்.

சமூகம் என்பது பொருளாதாரம், அரசியல், சமயம், பண்பாடு போன்ற பல்விதமான ஒழுங்கற்ற வேறுபாடுகளுடனான நபர்கள் தொடர்புபடுகிற முறைமைத் தொகுதியின் சேர்க்கையாகும். இங்கு பல்வேறு இயல்புகளுள்ளே, குறிப்பிட்ட ஒருமைப்பாடுடைய சமூகமொன்றுக்குரிய, தரங்கள், ஒழுக்கங்கள், பழக்க வழக்கங்கள் என்பன காணப்படுகின்றன. சமூகம் பயணிக்கிற திசை முடிவு செய்யப்படுவது இந்த பொதுத்தன்மை மூலமே ஆகும்.

வெகுசன ஊடகமொன்றின் கடமைப் பொறுப்பு ஆவது, இந்த பொதுத் தன்மையை தொடர்ந்து முன்கொண்டு செல்லலாகும். அது ஒரு சமூகத்தின் இருப்பிற்கு மிகவும் முக்கியமானதாகும். அவ்வாறே அதில் நிலவுகிற பல்வகைமையும் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அதன் காரணமாக வெகுசன ஊடகத்தினால் இப்பொதுத் தன்மையும் பல்வகைமையும் ஒருசேர விருத்தி செய்யப்படவேண்டும்.

வெகுசன ஊடகம் செயற்படுத்தப்படுகிற விதமானது பெரும்பாலும் மிருது வானதும் நுண்மையானதும் விசித்திரமானதுமாகும். அவ்வாறு இல்லாவிட்டால், பெறுநர்களைக் கவர்ந்திட முடியாது என்பதும் கவனிக்கத்தக்கது.

## 4. வெகுசன ஊடக நிறுவனங்களின் உரிமையாண்மை பெறுநர்களின் மீது ஏற்படுத்தும் தாக்கம்

வெகுசன ஊடகத்தினால் ஏற்படுத்தப்படும் தாக்கம் பிரபல்யமானதாகும். சில வேளைகளில், ஊடகத்தினால் அறிமுகப்படுத்தப்படுபவற்றை உபயோகிக்காதிருந்தால் வாழ்க்கை முழுமையடையாததொரு நிலை ஏற்படல், இளமை இல்லாது போதல் புத்தியை மழுங்கடித்தல் போன்ற உளரீதியான பாதிப்புக்கள் மக்கள் வாழ்க்கையில் மாயமாகக் கட்டியெழுப்பப்படுகின்றன. அவ்வியல்பு தோற்றுவிக்கப்படுவது வெகுசன ஊடகங்களினது உரிமைத்துவத்தின் விருப்பங்களுக்கு ஏற்பவேயாகும். ஊடக நிறுவன விருப்பமாவது, இயன்றளவு உச்சமட்டத்தில் பெறுநர்களை தமது ஊடகத்தின்பால் எப்பாடுபட்டும் நகர்த்திக் கொள்வதே ஆகும்.

வர்த்தக அனுசரணையாளர்களைத் தவிர்த்து எந்தவொரு வெகுசன ஊடகமும் தொடர்ந்து நிலைத்து இருக்க முடியாது. அதனாலேயே ஊடக நிறுவனம் மற்றும் உரிமைத்துவத்துக்கு வர்த்தகர்களின் அல்லது அனுசரணையாளரின் விருப்பத்துக்கேற்ப செயற்படவேண்டியேற்பட்டுள்ளது. எந்தவொரு ஊடகநிறுவனமும் பண்பு உத்தரவாதத்தோடு உயர் செய்திகளை முன்வைப்பதற்கு விருப்பம் காட்டிய போதிலும், அது தொடர்பான அனுசரணையாளர்களைக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமான விடயமாகும். சமூகத்திற்காக பெறுநர்களின்பால் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஊடகவியலாளர்களால் முடியும். இலங்கைச் சமூகத்தின் நன்மைக்குத் தேவையான மனப்பாங்கு, அறிவு, திறன், அபிவிருத்திக்காக காத்திரமாகப் பணியாற்ற வேண்டியது ஊடகவியலாளர்களின் கடமைப் பொறுப்பாகும்.

### 4.3 வெகுசன ஊடக நிறுவனங்களும் அரசும்

நாட்டின் உத்தியோகபூர்வ ஆட்சி அரசுக்கே உரியது. பொதுசன அபிப்பிராயத்தின் மீது தாக்கமேற்படுத்துவதில் வெகுசன ஊடகங்களுக்குப் பாரிய வாய்ப்புண்டு. இந்த அதிகாரமானது அரசுக்கு தாக்கத்தையேற்படுத்துகிற அம்சமாகும். போட்டித்தன்மையுடன் தமது ஊடகச் செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது அதைச் சார்ந்து பல்வேறு விதத்தில் பொதுசன அபிப்பிராயத்தை கொண்டுசெல்லும் ஆற்றல் வெகுசன ஊடகத்திற்கு கிடைக்கின்றது. இங்கு,

1. அரசாங்கத்துக்கு சார்பாக செயற்படும் ஊடகமும்
2. அரசாங்கத்துக்கு எதிராக செயற்படும் ஊடகமும்
3. நடுநிலையுடன் செயற்படும் ஊடகமும்

இருக்கக் கூடும்

அரசாங்கத்துக்கு சொந்தமான வெகுசன ஊடகத்தின் மீது அந்த அரசாங்கம் நேரடியாகத் தலையீடு செய்திட முடிந்தபோதும், தனியார் துறைக்கு சொந்தமான ஊடகம் மீது நேரடியாகத் தலையிடுகிற ஆற்றல் அரசுக்கு இல்லை. இருப்பினும் எந்த ஒரு அரசாக இருந்தாலும் அதன் விருப்பமாவது யாதெனில், பொதுசன அபிப்பிராயத்தை அரசுக்கு சாதகமாகப் பேணுவதற்கேற்ற விதமாக, வெகுசன ஊடகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதைக் காண்பதுவே ஆகும்.

இருந்தபோதும், கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம் அரசியல் யாப்பிலே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கைக்குள் வெகுசன ஊடகங்களைக் கட்டுப்படுத்த அரசுக்குள்ள ஆற்றல் அந்தச் சுதந்திரத்தால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அரசு என்பது எப்பொழுதும் ஏதாவதொரு அரசியல் கொள்கை அபிப்பிராயத்துடன் காணப்படுவதாகும். சமூகத்துள் பல்வேறு அரசியல் அபிப்பிராயங்கள் இருப்பதோடு, அவை பல்வேறு விதங்களிலும் சமூகத்தில், வெளிப்படுத்தப்படுகின்றன. அப்போது வெகுசன ஊடகமும் இவ்வெளிப்படுத்தலின் ஒரு பகுதியாக இருப்பது தவிர்க்கப்பட முடியாததாகும்.

அரசின் அரசியல் அபிப்பிராயங்களை ஏற்றுக் கொள்ளும் வெகுசன ஊடகங்களைப் போலவே அதற்கு எதிராகவுள்ள வேறு அரசியல் அபிப்பிராயங்களை ஏற்றுக்கொள்கிற வெகுசன ஊடகங்களும் இருக்க முடியும். அது சனநாயகச் சமூக மொன்றில் இருக்க வேண்டிய இலட்சணமாகும். அதனால் அரசுக்கு விருப்பமாகவே எப்போதும் வெகுசன ஊடகங்கள் செயற்படும் என நினைத்துப்பார்க்க முடியாது.

இவ்விதமாக பல்வேறு அபிப்பிராயங்கள் வெகுசன ஊடகங்களினூடாக சமூகமயமாக்கபடுதலோடு நிகழ்வது யாதெனில் பொதுமக்கள் இவற்றின் உண்மை யையும் யாதார்த்தத்தையும் தெரிந்தெடுக்கத் தூண்டப்படுகின்றமையாகும். இவ்வி தமாக மக்களிடையே காணப்படும் இந்த ஆற்றல் அரசுக்கு மிக முக்கியமானதாகும். அதனால் அரசுக்கும் வெகுசன ஊடகத்துக்குமிடையிலான தொடர்பினைப் பற்றி வரைவிலக்கணப்படுத்த முடிவது, சமூகத்தின் மக்களின் விமர்சன ரீதியான சிந்தனை எந்த மட்டத்திலுள்ளதென்பதை ஒரு நியதியாக எடுத்துக்கொள்ளும் அடிப்படை யிலாகும்.

## 1) வெகுசன ஊடக நிறுவனத்தின் வர்த்தகக் குறிக்கோள்கள்

வெகுசன ஊடக நிறுவனமொன்றை ஸ்தாபிப்பதன் குறிக்கோளாவது சமூகத்தை வழிநடத்துவதாகும். எனினும், வெகுசன ஊடக நிறுவனம் என்பது ஐயமில்லாததொரு வர்த்தகம் ஆகும். அது வருமானம் மற்றும் செலவுகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதை மறுக்க முடியாது. அதன் பெறுபேறாக அமைவது இலாபம் அல்லது நட்டத்தைப் பெற்றுக் கொள்வதாகும். எந்தவொரு வர்த்தகத்துக்கும் நட்டத்துடன் வியாபாரத்தை தொடர்ந்து நடத்த முடியாது. எந்தவொரு வர்த்தகமாக இருப்பினும், இலாபத்தைச் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளிலிருந்தே அது பெறுகின்றது. வெகுசன ஊடக நிறுவனத்துக்கும் இது பொருந்தும்.

ஊடக நிறுவனமொன்றை நடாத்திச் செல்லும்போது, பராமரிப்புச் செலவு களைப் பொறுப்பெடுக்க வேண்டியேற்படும். உதாரணமாக செய்திப் பத்திரிகை நிறுவனமொன்றுக்காக அச்சியந்திரமும் வானொலி தொலைக்காட்சி நிறுவனங்களில் அரச வரிகள், தொழினுட்பக் கருவிகள், பராமரிப்பு மற்றும் உற்பத்திச் செலவுகள் போன்று பாரிய மூலதனமொன்று தேவைப்படுகிறது. ஊடக நிறுவனத்துக்காகத் தேவைப்படும் இச் செலவுகள் பெறுநனால் மட்டும் நிறைவேற்றப்பட முடியாத வையாகும். அவ்வாறு செய்திட முயற்சித்தால் செய்திப்பத்திரிகையின் விலை, சாதா ரண பெறுநனொருவனுக்கு கொள்வனவு செய்யமுடியாத விலையாக இருக்கும். இதனைத் தவிர்த்திட, செய்திப் பத்திரிகை அச்சிடல் செலவுகளை வேறுவழிகளில் கணக்குத் தீர்ப்பதனாலேயே அப்பத்திரிக்கையை பெறுநன் கொள்வனவு செய்ய முடிகிறது. ஊடக நிறுவனங்கள் வர்த்தக விளம்பரங்களுக்கு பக்கங்களை ஒதுக்க வேண்டியேற்படுவதும் இதனாலேயே ஆகும்.

இவை காரணமாகவே செய்திப்பத்திரிகை நிறுவனம் தமது பத்திரிகைகளின் பக்கங்கள் மற்றும் இடைவெளிகளைச் சந்தைப்படுத்துகிறது. வானொலி நிறுவனம் தனது அலைவரிசை நேரத்தை சந்தைப்படுத்துகிறது. தொலைக்காட்சி நிறுவனமும் ஒளிபரப்பு நேரத்தை சந்தைப்படுத்துகிறது. இவ்விதமாக வருமானத்தை சம்பாதித்துக் கொள்வதற்கான தேவை ஊடக நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ளது.இதன்படி ஊடக நிறுவனமொன்று தனது இருப்பைத் தொடரவேண்டுமானால் வர்த்தகக் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வது அதன் குறிப்பிடத்தக்க நியதிசார் காரணி யாகியுள்ளது.

## 2) வெகுசனஊடக நிறுவனத்துக்கும் அரசாங்க நோக்கங்களுக்கு இடையிலான பரஸ்பர தொடர்பு

அரசாங்க நோக்கம் என்பது அரசியல் நோக்கமே ஆகும். அதற்கு காரணம், பதவிக்கு வருகிற எந்தவொரு அரசாங்கமும் ஏதாவது ஒரு அரசியல் கட்சியாகஇருப்பதே ஆகும். அது ஒரு தனிக்கட்சியாகவோ, பலகட்சிகள் சேர்ந்து அமைக்கப்பட்ட கூட்டாகவோ இருக்கக்கூடும். எந்தவொரு அரசிலும் இருக்கக் கூடிய பிரதான குறிக் கோள்கள் நான்கினை இங்கு வரிசைப்படுத்த முடியும்.

1. அரசை நிலையாக நடத்திசெல்லல்
2. பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களைத் தயாரித்து நடை முறைப்படுத்தல்
3. பொதுசன அபிப்பிராயத்தை தங்களுக்கு சாதகமாகக் முன் கொண்டு செல்லல்
4. அரசின், அரசியல் கொள்கைகள் மற்றும் தூரநோக்குகளை மக்களிடம் உறுதிப்படுத்திக் கொள்ளல்

இவை அரசொன்றின் இருப்புக்கு இன்றியமையாத காரணிகளாகும். இக்குறிக் கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான தகவல்களை சமூகமய மாக்குகின்ற வாய்ப்பு வெகுசன ஊடகத்துக்குரியதாகும். அரச ஊடகங்களை இந்நோக்

கங்களுக்காக நேரடியாக ஈடுபடுத்துகின்ற ஆற்றல் அரசிடம் உள்ளது. இருப்பினும் அரசுக்குச் சொந்தமல்லாத தனியார் வெகுசன ஊடகங்கள் இக்குறிக்கோள்களை நிறைவேற்றுவதிலீடுபடல் இலகுவான காரியமல்ல. அதற்கான காரணம், அரசியல் யாப்பில் உரித்தாக்கப்பட்டுள்ள கருத்து வெளியீட்டு சுதந்திரத்திற்கிணங்க தமது அபிப்பிராயத்தின்படி அரசை விமர்சித்திட, அரசின் அபிவிருத்திகளை விமர்சித்திட, குறிப்பிட்ட ஊழல்கள் ஒழுங்கீனங்கள் நிகழ்கின்ற இடங்கள் மற்றும் அதனோடு தொடர்புகளை பகிரங்கப்படுத்துவதற்காக தமது அபிப்பிராயத்தை அரசுக்கு சாதகமற்ற முறையில் வெளிப்படுத்திடலைத் தவிர்ப்பது என்பது வெகுசன ஊடகங்களுக்கு கடினமாகவே இருக்கும்.

சில சந்தர்ப்பங்களில் அரசாங்க அபிவிருத்தி செயல் திட்டங்கள் தொடர்பாக மக்களின் விருப்பத்தைப் போலவே விமர்சனத்துக்கும் இலக்காக வேண்டியேற்படும். இன்னொரு சந்தர்ப்பத்தில் ஊடக வெளிப்பாடுகள் மூலம் மக்களை எதிர்ப்பு மற்றும் வன்செயல்களிலீடுபடுத்தவும் முடியும். சிற்சில நிகழ்வுகளின்போது அவற்றை அறிக்கையிடல், பகுப்பாய்வு செய்தல், அது தொடர்பாக மக்களது அபிப்பிராயத்தைத் தூண்டுதல். ஆகியன வெகுசன ஊடகங்களின் கடமையும் பொறுப்பாகும். வெகுசன ஊடகம் ஒரு நாட்டின் நான்காவது அரசாங்கமெனக் கருதப்படுவது இதன் காரணமாகவே ஆகும். (அரசியல் யாப்பு, நிறைவேற்று அதிகாரம், நீதிமன்றம் ஆகியன முதலாம் இரண்டாம் மூன்றாம் அரசாங்கங்களாகக் கருதப்படும்).

அரசாங்கமானது, இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் ஊடகக் கலந்துரையாடல்களை நடத்தி அவ்வவ் விடயங்களை, பிரச்சினைகளை, முறைப்பாடுகளை, அமுலாக்கற் செயற்பாடுகள் ஆகியன தொடர்பான தகவல்களை ஊடகங்களிடம் உத்தியோகபூர்வமாக கொடுக்கின்றது. அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு, தகவல்துறை அமைச்சின் ஊடகக் கலந்துரையாடல் ஆகியன இங்கு முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவை ஊடகங்கள் வழியாக வெளியிடப்படுவதோடு அவை தொடர்பாக கேள்வி எழுப்புவதற்கும் அவற்றைப் புறக்கணிப்பதற்கும் அவற்றை விமர்சிப்பதற்கும் ஊடக நிறுவனங்கள் நடவடிக்கைகளை எடுக்கின்றன. இது, சனநாயக சமூகமொன்றிலுள்ள ஊடகங்களின் இயல்பாகும்.

அரசாங்க ஊடகங்களின் முக்கியமான பணியாவது, அரசு தொடர்பான நன்மையானதும் விருப்பத்துகுரியதுமான பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குதலாகும். இங்கு அவை அரசை இயல்புக்கு அதிகமாக வர்ணிப்பதிலீடுபட்டால் அவ்வூடகங்களிருந்து மக்கள் வெளியேறிவிடுவார்கள். அது ஊடகங்களின் இருப்புக்கு ஒரு பிரச்சினையாகும். நடுநிலையான விதத்தில் விமர்சன ரீதியாக ஊடகப்பயன்பாட்டை கொண்டு செல்லலே இங்குள்ள தேவையாகும்.

இறுதியான அர்த்தத்தில் விளங்குவது யாதெனில், நாட்டைக் கட்டியெழுப்புகிற பணியை அரசு முன்னெடுப்பதோடு வெகுசன ஊடகங்களினால் பெறப்படுகின்ற

விடயங்களும் நாட்டைக் கட்டியெழுப்பும் அதே பணியோடு ஒத்தனவாகவே உள்ளன. அதுவே ஒரு நாட்டின் வெகுசன ஊடகத்தின் உறுதியான கடமையாகும்.

## 3) வெகுசன ஊடக நிறுவனச் செயற்பாடுகளின் மீது அரசின் கடமையும் பொறுப்பும்

உண்மை முன்மாதிரியை எடுத்துக் காட்டுவோமாயின், எந்தவொரு வெகுசன ஊடகமும் இறுதியில் சேவையாற்றுவது பொதுமக்களுக்கேயாகும். பிரயோகரீதியாக அதில் சிற்சில வேறுபாடான கருத்து நிலைகள் இருக்கக் கூடும். எப்படியிருப்பினும் கருத்தை வெளியிடுவதற்கான உரிமையின் கீழ் பொதுமக்கள் அறிவதற்கான தகவல்களை முன்வைக்க வெகுசன ஊடகத்துக்குள்ள உரிமையை ஒவ்வொரு அரசாங்கமும் ஏற்றுக் கொண்டுள்ளது. அதனால் அரசின் கடமையாவது, அவ் வெண்ணத்தை வெளிப்படுத்துகிற உரிமை தேசத்தின் (அரசாங்கம் அல்ல) ஆரோக் கியத்திற்காக பயன்படுத்துவதற்கு அவசியமான சூழலை உருவாக்கித்தருவது ஆகும். அரசியல்வாதிகளின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் அல்லது அரசாங்க அலுவலர்களின் ஊழல், மோசடி மற்றும் செயல்திறனின்மை தொடர்பில் அது பற்றிய தகவல்களை பொதுமக்களுக்கு முன்வைப்பது வெகுசன ஊடகத்தின் கடமையும் பொறுப்புமாகுமென்பது உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும்.

ஊடகச் செயற்பாடுகளின் மீது அரசாங்கம் நேரடியாகத் தலையிடுவது மிகவும் குறைந்த மட்டத்திலாகும். அதற்கான காரணம், நேரடித்தலையீட்டின்வழியாக வெகுசன ஊடக நிறுவனங்களின் கருத்து வெளியீட்டு உரிமைக்கு தடையேற்படுகின்றமை ஆகும். அது, அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ள, கருத்துவெளியீட்டு சுதந்திரத்துக்கும் எதிரானதாகும். அதுமட்டுமல்ல உலகம் முழுவதும் கருத்து வெளியீட்டுச் சுதந்திரம் அல்லது விசேடமாக ஊடக சுதந்திரம் பற்றிய சர்வதேச கருத்து வேறுபாடொன்று இருப்பதன் காரணமாக ஊடக செயற்பாடுகளில் அரசு நேரடியாக தலையிடுவது மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களிலாகும். அவற்றைப் பின்வருமாறு எடுத்துக் காட்ட முடியும்.

## 4) ஊடகச் செயற்பாடுகளின் மீது அரசாங்கத்தின் நேரடியான மற்றும் மறைமுகமான தலையீடுகள்

1. தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவினால் வானொலி தொலைக்காட்சி அலைவரிசைகளுக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல், அது தொடர்பிலான செயற்படுத்துதலுடன் தொடர்புடைய ஒப்பந்தங்கள், நியதிகளிலிருந்து மீறுதல் மற்றும் அதற்கிணங்க செயற்படாமை மீது அச்சே வைகளை இடைநிறுத்துதல், எச்சரித்தல் மற்றும் அறிவுரை கூறல்

2. அரசியல் யாப்பின் வழியாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள விதத்துக்கு மாறான விசேட சந்தர்ப்பங்கள் அதாவது எதிர்பாராத சந்தர்ப்பங்கள், நாட்டின் சமாதானத்தை மீறல் மற்றும் கலகங்கள் ஏற்படுதலைத் தவிர்த்தல் மற்றும் பயங்கரவாதத்தை தடுத்தல் ஆகிய சந்தர்ப்பங்களில் சகல வெகுசன ஊடகங்களின் செய்திகளையும் வேறுதிருப்பல்களையும் கட்டுப்படுத்தல்.

3. தேசிய பாதுகாப்புக்குத் தீங்கு விளைவிக்கும் செயற்பாடுகளை செய்யும்போது வெகுசன ஊடக நிறுவனமொன்றை அரசே சுவீகரித்துக் கொள்ளவும் தற்காலிகமாக தடை செய்யவும் முயற்சித்தல், சிற்சில நியதிகளின் கீழ் வரி விதித்தலும் இங்கு இடம்பெறலாம் உதாரணமாக இந்திய தொலைக் காட்சி நாடகங்களை குரல் மாற்றி ஒளிபரப்புவதற்காக அதிக வரிவிதிக் கப்பட்டிருப்பதை காணலாம்.

5. அரச ஊடக நிறுவனங்களில் ஊடகவியலாளர்களை நியமிப்பது நிர்வகிப்பது சம்பந்தமாக அரசுக்குரிய அதிகாரங்களுக்கிணங்க செயற்படுதல் அரசாங் கத்தின் நேரடித் தலையீட்டில் நடைபெறுகிறது. இருப்பினும், தனியார் துறையின் ஊடகவியலாளர்கள் மீது அரசின் அவ்வித தலையீடு இல்லை. அரசின் மறைமுகமான தலையீடுகள் சிலவற்றை இங்கு காணமுடிகிறது.

6. இலங்கை பத்திரிகைச் சபையினால் செய்திப்பத்திரிகைக் கலைஞர்களுக்காக ஒழுக்கக் கோவையொன்று வெளியிடப்பட்டுள்ளமையானது விருப்பத்தோடு கடைப்பிடிக்க வேண்டியதாகும்.

7. இலங்கை செய்திப்பத்திரிகை சபையினூடாக வெகுசன ஊடகங்களின் மீது பொதுமக்கள் முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் விசாரித்தலும் தீர்ப்பினைப் பெற்றுக்கொடுத்தலும் என்பன அரசின் மறைமுகத்தலை யீடுகளுக்கு வாய்ப்பைத்தருவனவே.

8. ஊடகவியலாளர்களுக்கு விசேட வசதிகளை வழங்கல் போன்றவற்றினூடாக ஊடகவியலாளர்களை அரசுக்குச் சாதகமான மன நிலையுடன் நடத்திச் செல் வதற்கு மறைமுகமாக தலையீடு செய்ய முடியும். இருந்தபோதும் அது அரசினது குறைபாடாக அல்லாது அரசு பொதுமக்களுடனான தொடர்பைப் பேணுதலில் உள்ள நன்மையான பயன்பாடாகவும் கொள்ள முடியும்.

அரசாங்கம் பொதுமக்களுடனும் வெகுசன ஊடகங்களுடனும் சிறந்த தொடர் பொன்றையும் பேண வேண்டும். இந்தத் தொடர்பு அவசியமாவது வெவ்வே றான அரசி ன் இருப்பிற்கோ அல்லது பொதுமக்களின் இருப்பிற்கோ அவ்வெகுசன ஊடகத்தின் இருப்பிற்கோ அல்ல. தேசத்தின் இருப்புக்காகவும் வளர்ச்சிக்காகவும் ஆகும்.

**பயிற்சி**

**தனியாள்**

1. இலங்கையில் வெளியிடப்படும் செய்திப்பத்திரிகைகள் அவற்றை வெளியிடும் நிறுவனங்கள் மற்றும் அதன் முகவரி, தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம், மின்னஞ்சல் முகவரி, மற்றும் இணையத்தள முகவரி ஆகியன அடங்கிய ஆவணமொன்றைத் தயாரிக்குக.

2. இலங்கையில் ஒலிபரப்பாகும் வானொலி அலைவரிசைகளின் பெயர்கள், அவற்றை ஒலிபரப்பும் நிறுவனங்களின் முகவரிகள், தொலைபேசி, தொலை நகல் இலக்கங்கள், மின்னஞ்சல் முகவரி மற்றும் இணையத்தள முகவரி அடங்கிய ஆவணமொன்றைத் தயாரித்தல்.

3. இலங்கையில் ஒளிபரப்பாகிற தொலைக்காட்சி அலைவரிசைகள், அவற்றை ஒளிபரப்பும் நிறுவனங்களின் பெயர்கள் அவற்றின் முகவரிகள், தொலை பேசி, தொலைநகல் இலக்கங்கள், மின்னஞ்சல் முகவரி மற்றும் இணையத்தள முகவரி அடங்கிய ஆவணமொன்றை தயாரிக்குக.

4. உங்களுக்கு விருப்பமான செய்திப்பத்திரிகையொன்று, வானொலி அலை வரிசையொன்று, தொலைக்காட்சியொன்று ஆகியவற்றை தெரிவு செய்து, அவை பற்றிய விபரங்களை முடியுமானளவு திரட்டி எழுதுக. அத்தகவல் களையுள்ளடக்கி ஒரு சிறு நூலினைத் தயாரிக்குக.

5. வாரவெளியீடாக வரும் தமிழ்/சிங்கள/ஆங்கில செய்திப் பத்திரிகைகள் சிலவற்றைப் படியுங்கள். அவற்றின் முன்பக்கத்தின் பிரதான செய்திகள் எவை? அவற்றை அறிக்கையிட்டவர் யார்? அதற்காக இடப்பட்டுள்ள தலைப்புகள் யாவை? போன்றவை உள்ளடங்கிய பகுப்பாய்வு ரீதியான அறிக்கையொன்றைத் தயார் செய்க.

குழு ஒப்படை

1. மாணவர்கள் சிறுகுழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு செய்திப்பத்திரிகை அல்லது வானொலி அல்லது தொலைக்காட்சியைத் தெரிவு செய்க. ஒரு வாரம் முழுவதும் அவற்றைப் பற்றி வெவ்வேறாகக் கற்கை செய்யுங்கள். தகவல்களைச் சேகரியுங்கள், அவற்றின் ஊடகசெயற்பாடு நடைபெறும் விதத்தைப் பற்றி ஒன்றாகக் கலந்துரையாடுங்கள். அதற்கிணங்க அது பற்றிய சிறு அறிக்கையொன்றை தயாரித்து வகுப்பில் முன்வையுங்கள்.

2. சிறு குழுவாக வயதுவந்த 10 பேரை சந்தியுங்கள் வெகுசன ஊடகங்களால் ஏற்படும் தாக்கம் பற்றி அவர்களோடு கலந்துரையாடுங்கள். அது தொடர்பாக அவர்கள் வெளிக்காட்டும் அபிப்பிராயங்களை ஆவணப்படுத்துங்கள். அவற் றை ஒன்று திரட்டி, அறிக்கையொன்றைத் தயார் செய்யுங்கள். அதனை வகுப்பில் முன்வையுங்கள்.

3. குழுவாகக் கலந்துரையாடுவதற்கு ஒரு பத்திரிகை நிறுவனம் அல்லது ஒரு வானொலி நிறுவனம் அல்லது ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தை தெரிவுசெய்துகொண்டு அவற்றின் ஒழுங்கமைப்புத்திட்டம் பற்றிய தகவல் களைப் பெற்றுக் கொள்ள உத்தியோகபூர்வ செயல் உபாயமொன்றைப் பயன்படுத்துங்கள் அத்திட்டத்தை காகித அட்டை ஒன்றில் அழகாக எழுதி, மீளுருவாக்கம் செய்க. அதனை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.




உரு 4.15